# 2. தமிழ் அமுது

**அலகு அறிமுகம்**

தமிழ்மொழி பழமையான மொழி. இலக்கிய வளம் செறிந்த மொழி. உலகிலுள்ள மொழிகளில் தமிழ் மொழிக்குத் தனிச் சிறப்புண்டு. தமிழ்மொழியின் சிறப்பையும், இலக்கிய வளத்தையும், தமிழ் வளர்த்த புலவர்களையும் அறிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடன் இந்த அலகு அமைக்கப்பட்டுள்ளது.

இரண்டடிகளில் வாழ்க்கையை விளக்கும் திருவள்ளுவர், ஆத்திச் சூடியின் ஆசிரியர் ஔவையார். பாட்டுக்கொரு புலவன் பாரதி தமிழை அமுதாகக் கருதிய பாரதிதாசன் போன்றோர் தமிழுக்கு ஆற்றிய தொண்டினை எக்காலத்திலும் மறக்க முடியாது. இந்தப் புலவர்களின் பெருமையும் அவர்கள் தமிழுக்கு ஆற்றிய தொண்டையும் பற்றிக் குழந்தைகள் அறிந்து கொள்ள வேண்டும்.

**இவ்வலகில் நான்கு துணை அலகுகள் உள்ளன**

- தமிழைப் படிப்போம் (**பாடல்**)
- கொடை வள்ளல் (**சிறுகதை**)
- நாம் கண்ட புலவர்கள் (**திருக்குறள்**)
- திருந்தப் பேசு (**கதை**)

**முதன்மைக் கற்றல் அடைவுகள் :**

- எதுகை, மோனை சொற்களை இனம் காண்கிறார்கள்.
- பாடலை முழுமைப்படுத்துகிறார்கள்.
- பொருத்தமான குறியீடுகளைப் பயன்படுத்துகின்றனர்.
- சுவரொட்டி உருவாக்குகிறார்கள்.
- மொழிச் செயல்பாடுகளில் ஈடுபடுகிறார்கள்.

# அலகு வலைச்சட்டம்

| கருத்துகள் / திறன்கள் | கற்றல் செயல்பாடுகள் | முதன்மைக் கற்றல் அடைவுகள் |
|---|---|---|
| • தமிழ் மொழியின் சிறப்பைக் கூறும் பாடல்களை மெட்டமைத்து ராகத்தோடும் தாளத்தோடும் பாடுதல்.<br>• பாடல்களை வாசித்து ஒத்த ஓசையுடைய சொற்களைக் கண்டறிதல்.<br>• நிகழ்ச்சிகள், விழாக்கள் போன்றவற்றிற்குச் சுவரொட்டிகள் படைத்தல்.<br>• பாடல்கள், குறள்கள், கதைகள் மூலம் தமிழ் மொழியின் சிறப்புகளை அறிதல். | • நிகழ்ச்சி கூறுதல்.<br>• குறியீடுகள் இடுதல்.<br>• வினாவாக்கியம் எழுதுதல்.<br>• பாடல் எழுதுதல்.<br>• சுவரொட்டி தயாரித்தல்.<br>• தொடர் மாற்றி எழுதுதல்.<br>• நாபிறழ் பயிற்சியில் ஈடுபடுதல்.<br>• மொழிச் செயல்பாட்டில் ஈடுபடுதல். | • பாடல் வரிகளில் காணப்படும் எதுகை, மோனைச் சொற்களை இனம் காண்கிறார்கள்.<br>• ஒத்த ஓசையுடைய சொற்களைச் சேர்த்துப் பாடலை முழுமைப்படுத்துகிறார்கள்.<br>• வாக்கியங்களில் பொருத்தமான இடங்களில் பொருத்தமான குறியீடுகளைப் பயன்படுத்துகிறார்கள்.<br>• கதைகள், நிகழ்ச்சிகள் வாசித்து தமிழ் மொழியின் சிறப்பை அறிந்து கொள்கிறார்கள்.<br>• மொழிச் செயல்பாடுகளில் ஈடுபடுகிறார்கள். |



இந்த அலகில் உள்ள பாடப்பகுதிகளும் செயல்பாடுகளும் முற்றுப்பெற சுமார் 20 பிரிவேளைகள் தேவைப்படலாம்.

**கற்றல் துணைக்கருவிகள்**

- கவிஞர்கள், புலவர்களின் படங்கள்
- சுவரொட்டிகள்
- திருக்குறள் எழுதிய அட்டைகள்

## தமிழைப் படிப்போம்

**வகுப்பறையில்...**

கவிஞர்கள், புலவர்களின் படங்களை வகுப்பில் அறிமுப்படுத்தலாம். இவர்களைத் தெரியுமா? எனக் கேட்கலாம். பெயர்களைக் கூறினால். அவர்களைப் பற்றிய செய்திகளைக் கூறலாம். ஏதாவது ஒரு கவிஞர் / புலவரின் பாடல்வரிகளை இராகத்தோடு பாடுங்கள்.

**தமிழுக்கும் அமுதென்று பேர்! அந்தத்**
**தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்குநேர்!**
**தமிழுக்கு நிலவென்று பேர்! – இன்பத்**
**தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர்!**

**பாரதிதாசன்**



**பாடுங்கள்**

இதுபோன்று தமிழின் பெருமையைக் கூறும் பாடல் நமது பாடப்பகுதியில் தரப்பட்டுள்ளது. அந்தப் பாடலைப் பாடுவோமா? எனக் கூறித் **தமிழைப் படிப்போம்** பாடலைப் பாடச் சொல்லுங்கள். பாடலை நடத்துவதற்கான உத்திகளைக் கையாளுங்கள். (அலகு 1-ல் கொடுக்கப்பட்டுள்ளது)

**ஒரே ஓசை**

பின்னர் குழந்தைகளை இரண்டு பாடல்களிலுமுள்ள ஒத்த ஓசையுடைய சொற்களைக் குறிப்பேட்டில் எழுதச் செய்தல்.

படிக்கணும்
தெரியணும்
சேர்க்கணும்

பார்த்தாலும்
பெற்றாலும்
அலுத்தாலும்

வகையுண்டு
வழியுண்டு
பலவுண்டு

**பாடி மகிழுங்கள்**

இதேபோன்று பாடப்பகுதியிலுள்ள **பாடி மகிழுங்கள்** பாடலையும் கற்பியுங்கள்.

வேலமரமும்
ஆலமரமும்

வள்ளிக் கொடியும்
கள்ளிச் செடியும்

வாழைப்பூம்
தாழம் பூவும்

- பாடலில் வரும் ல, ள, ழ சொற்களைத் தனித்தனியாக எழுதச் செய்தல்.
- வாசிக்கச் செய்தல்.
- குழந்தையிடம் கரும்பலகையில் எழுதக் கூறுதல்.
- ஆசிரியர் உதவலாம்.
- மேம்படுத்துதல்.
- திருந்திய வடிவத்தைக் குழந்தைகளிடம் எழுதச் செய்தல்.
- ஆசிரியர் பார்வைக்குப் பின் படைப்புத் தொகுப்பில் சேர்த்தல்.

## நூலகச் செயல்பாடு

பள்ளி நூலகத்திற்கு அழைத்துச் செல்லுங்கள்.
கவிதைப் புத்தகங்களைக் கொடுத்து உதவுங்கள்.
பாடல்களை வாசித்துப் பாடல் தொகுப்பு உருவாக்கலாம்.

## எனது தாய்மொழி

எனது மொழி தமிழ் மொழி
எனது தாயின் திருமொழி!
உலகினுக்கு முதன் மொழி
அழகமைந்த திருமொழி!

எழுத்தைக் கோத்த போதிலே
சொல்பிறக்கும் மொழியிது
சொல்லைக் கோத்த போதிலே
பொருள் பிறக்கும் மொழியிது!

எந்தக் கல்வி படிக்கவும்
எனது மொழி ஏற்றது
தமிழ் வழியில் படிக்கலாம்
வாழ்வில் இன்பம் எடுக்கலாம்.

- ஔவையாரைப் பற்றிய செய்திகளைக் கூறுங்கள்.

- ***ஔவையார் என்ற பெயரில் பல பெண்பாற் புலவர்கள் இருந்தனர்.***
- ***ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன் போன்ற நீதி நூல்களை எழுதியவர் பிற்காலத்தில் வாழ்ந்த ஔவையார்.***
- ***சங்க காலத்தில் வாழ்ந்த ஔவையார், அதியமான், நாஞ்சில் வள்ளுவன் போன்ற மன்னர்களைப் போற்றிப் பாடியுள்ளார்.***
- ***இவரது தமிழ்ப்புலமையைப் போற்றி, நீண்டநாள் வாழ அதியமான் ஔவையாருக்கு நெல்லிக்கனியை அளித்தார்.***

- நாஞ்சில் மன்னனிடம் பரிசில் பெற ஒருநாள் ஔவையார் அவரது அரண்மனைக்குச் சென்றார். அவரை மன்னன் எவ்வாறு உபசரித்தான் என்பதை வாசித்துப் பார்க்கச் சொல்லவும். **கொடை வள்ளல்** பாடப்பகுதிக்குச் செல்லவும். வாசிப்பு உத்திகளைப் பின்பற்றவும்.

# கொடைவள்ளல்



## எழுதுங்கள்

மீண்டும் பாடத்தை வாசிக்கத் தூண்டுவதற்காகக் கொடுக்கப்பட்ட செயல்பாடாகும். ஒவ்வொரு தடித்த சொற்களையும் ஆசிரியர் கூறும்போது குழந்தைகள் பாடப்புத்தகத்தை வாசிக்கட்டும். இணையான சொற்களைக் கண்டுபிடிக்கட்டும்.



**மாற்றி எழுதுங்கள்**

இச்செயல்பாடானது ஆண்பால், பெண்பால் கற்பிக்கும் நோக்குடன் கொடுக்கப்பட்டுள்ளது.

ஏழைகளுக்கு – வறியவர்களுக்கு
மகிழ்ச்சியாக – உவகையோடு
பரிசாக – கொடையாக
உள்ளம் – மனம்
வாழ்த்தி – புகழ்ந்து

**ஆண்பால்/பெண்பால் :**

- இனியன் பாடினான்
- இந்து பாடினாள்
- அவன் பாடினான்
- அவள் பாடினாள்
- இனியன் ஆடினான்
- இந்து ஆடினாள்
- அவன் ஆடினான்
- அவள் ஆடினாள்

**பலர்பால் :**

- அவர்கள் பாடினார்கள்
- நாங்கள் பாடினோம்
- நீங்கள் பாடினீர்கள்

- வேறு உத்திகளைப் பயன்படுத்தியும் குழந்தைகளுக்குக் கற்பித்துக் கொடுக்கலாமல்லவா?



## சொற்கள் எழுதுங்கள்

எதுகை, மோனையைக் குழந்தைகளுக்கு அறிமுகப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் கொடுக்கப்பட்டதே இந்தச் செயல்பாடு. பாடலில் முதலெழுத்துகளும், இரண்டாவது எழுத்துகளும் ஒன்றிவரும் சொற்களைக் கண்டுபிடித்து எழுதச் சொல்லுங்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **மோனை** | நாலு<br>நாட்டு | மேலும்<br>மேன்மை | கூலி<br>குழந்தை | ஆடி<br>அழகு | நாடி<br>நாளும் |
| **எதுகை** | நாலு<br>மேலும் | குழந்தை<br>அழகு | பாடி<br>நாடி | ஆடி<br>கூடி | |



## பொருளைக் கண்டுபிடியுங்கள்

இது ஒரு மொழிச் செயல்பாடாகும். தனிநபர் செயல்பாடாக இதைச் செய்யுங்கள். குழந்தைகள் எழுதியதைப் பரிசோதியுங்கள். மேம்படுத்த உதவுங்கள். ஆசிரியரின் படைப்பை வெளியிடுக. மீண்டும் குழந்தைகள் எழுதட்டும்; மேம்படுத்தட்டும். உங்கள் பார்வைக்குப்பின் படைப்புத் தொகுப்பில் சேர்க்கவும்.

- **இனிப்பு – கரும்பு**
- **கசப்பு – பாகற்காய்**
- **புளிப்பு – எலுமிச்சை**
- **உவர்ப்பு – உப்பு**
- **துவர்ப்பு – நெல்லிக்காய்**
- **கார்ப்பு – மிளகாய்**

சுவைக்கு ஏற்ற பொருட்களை மேலும் கண்டுபிடிக்கத் தொடர் செயல்பாடு கொடுக்கலாம்.



## கருத்து கூறுங்கள்

விருந்தினர்களை உபசரிக்கும் முறையினைப் பற்றிக் குழந்தைகளுடன் உரையாடுங்கள். அவர்கள் கூறும் கருத்துகளைக் கரும்பலகையில் எழுதுங்கள். ஒரு சொற்சூரியன் உருவாக்கலாமே!



- குழந்தைகள் குறிப்பேடுகளில் செயல்களை வரிசைப்படுத்தி எழுதட்டும். தனி நபர் செயல்பாடாகக் கொடுங்கள். பின்னர் ஐந்து குழுக்களாக்குங்கள். இப்படிப்பட்ட விருந் தோம்பல் செயல்கள் நமது பாடப்பகுதியில் உள்ளனவா என வாசித்துக் கண்டுபிடிக்கக் கூறுங்கள். குழந்தைகள் குழுவாக அமர்ந்து வாசிக்கட்டும். பாடத்திலுள்ள செய்திகளைக் கண்டுபிடித்துக் கூறட்டும். எழுதிய சொற் சூரியனை மேம்படுத்தட்டும். காகிதத்தில் எழுதி படைப்புத் தொகுப்பில் சேர்க்கட்டும்.

**குழுக்கள்**
அன்பு
இரக்கம்
பணிவு
பரிசு
வரவேற்பு



## குறியீடு இடுங்கள்

வாசிப்புக்கு மிகவும் இன்றியமையாதவை குறியீடுகளாகும். குறியீடுகளின் பயன்பாட்டினை அறிவதே இச்செயல்பாட்டின் முக்கிய நோக்கமாகும். பாடப்புத்தச் செயல்பாட்டினைக் குழந்தைகள் செய்யட்டும். தேவையான உதவிகள் செய்யலாம். சரியான நிறுத்தற் குறியீடுகளைப் பயன்படுத்த மேலும் சில செயல்பாடுகளைக் கொடுக்கலாம்.



## வினாச் சொற்கள் எழுதுங்கள்

இது மொழிச் செயல்பாடாகக் கொடுக்கப்பட்டுள்ள ஒரு செயல்பாடாகும்.

- குழந்தைகள் வாக்கியங்களை வாசிக்கட்டும்.
- விடைச் சொற்களை வாக்கியங்களில் அடையாளம் காணட்டும்.
- வினாச் சொற்களைக் கண்டுபிடித்து வினா வாக்கியம் உருவாக்கட்டும்.

- வேறு வினாச் சொற்களைப் பயன்படுத்திச் செயல்பாடு தொடரட்டும். வினாத் தொடருக்குச் சில எடுத்துக்காட்டுகள். தேவையானால் பயன்படுத்தலாம்.

| | |
|---|---|
| **ஏன்?** | மாலா புத்தகம் எடுக்க வீட்டுக்குப் போகிறாள்.<br>மாலா ஏன் வீட்டுக்குப் போகிறாள்? |
| **என்ன?** | அப்பா எனக்குப் பொம்மை வாங்கி வந்தார்.<br>அப்பா உனக்கு என்ன வாங்கி வந்தார்? |
| **யார்?** | ராமு என்னுடைய நண்பன்.<br>உன்னுடைய நண்பன் யார்? |

**வினா நிரல் / வினா வாக்கியம் உருவாக்கும்போது ஆசிரியர் கவனிக்க வேண்யடிது :**

- வினாக்கள் நமது சிந்தனையைத் தூண்டக் கூடியவை.
- கொடுக்கப்பட்டுள்ள பாடப்பகுதியை, பாடலை, சொற்றொடர்களை, நிகழ்ச்சியைப் பற்றிய கருத்துப் புரிதல் நடைபெற்றுள்ளதா என அறியவும், அளவிடவும் வினா நிரல் நமக்குப் பெரிதும் உதவும்.

**இதன் பல்வேறு நிலைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன**

- பாடப்பகுதியோடு தொடர்புடைய வினாக்களை இயன்ற அளவு உருவாக்குதல்.
- குழுவில் கலந்துரையாடுதல், தொகுத்தல்.
- தயாரித்த வினாக்களுக்கு விடைகளையும் தெரிந்து வைத்திருத்தல்.
- பிற குழுவினரிடமும் கேட்டுத் தெரிந்து கொள்ளுதல்.
- சரியான விடை கிடைத்தால் குறித்துக் கொள்ளுதல்.
- தவறான விடை கிடைத்தால் அடுத்த குழுவிடம் கேட்டல்.
- தம்முடைய குழுவில் வாசித்தல்.
- தேவையான அளவு மேம்படுத்துதல்.
- பொதுவான வாசிப்புக்கு வாய்ப்பு.
- நல்ல தெளிவான வினாநிரல் தயாரித்த குழுவைப் பாராட்டுதல்.



## ஒரு, ஓர் வேறுபாடு அறியுங்கள்

- உயிரெழுத்தில் தொடங்கும் சொற்களுக்கு முன்னால் **ஓர்** என்றும் உயிர்மெய்யெழுத்தில் தொடங்கும் சொற்களுக்கு முன்னால் **ஒரு** என்றும் எழுத வேண்டும். இச்செயல்பாட்டைச் செய்யலாம்.

- மானும் ஒட்டகமும் விலங்குகள் தானே! பின்னர் ஏன் **ஒரு மான்** என்றும் **ஓர் ஒட்டகம்** என்றும் கொடுக்கப்பட்டுள்ளது என்ற கேள்வியுடன் இச்செயல்பாட்டைத் தொடங்கலாம்.

- தொடர்ச்சியாக இந்தப் பயிற்சியைக் குழந்தைகளிடம் செய்யச் சொல்லுங்கள்.

**இலை, ஈ, உரல், ஏணி, ஓநாய், ஊஞ்சல்**
**மரம், கட்டில், சைக்கிள், குப்பி,**
**புத்தகம், கணினி, கடிகாரம்**

- குழந்தைகள் கண்டுபிடித்து எழுதட்டும்

- உயிரெழுத்தில் தொடங்கும் பெயர்ச்சொல்லுக்கு முன்னால், உயிர் மெய்யெழுத்தில் தொடங்கும் பெயர்ச்சொல்லுக்கு முன்னால் என ஞாபகப்படுத்துங்கள்.

**ஓர் இலை, ஓர் ஈ........................ என எழுதட்டும்**

**ஒரு கட்டில், ஒரு சைக்கிள் ...................................**

- இவ்வாறு செயல்பாட்டைத் தொடர்ந்து செய்யலாமல்லவா? ஆசிரியரின் ஆய்வுக்குப்பின் மேம்படுத்திக் குழந்தைகள் குறிப் பேடுகளில் எழுதட்டும்.

- படைப்புத் தொகுப்பில் சேர்த்துக் கொள்ளலாம்.

## நாம் கண்ட புலவர்கள்

**குறளும் கதையும்** பாடப்பகுதியைக் குழந்தைகள் திருப்பட்டும் (பாடப்புத்தகம் பக்கம் 23) கடைசி மூன்று வரிகளை ஒரு குழந்தையிடம் வாசிக்கச் சொல்லுங்கள். இந்த விளக்கந்தான் பாடப்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள குறள் எனக் கூறுங்கள். குழந்தைகள் குறளை வாசிக்கட்டும். இப்போது குறள் பற்றியும், திருவள்ளுவரைப் பற்றியும் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுக்கலாமல்லவா?




### திருக்குறள்

- இயற்றியவர் - திருவள்ளுவர்.
- இரண்டு அடிகள் கொண்ட பாடல்.
- 133 அதிகாரங்கள் உள்ளன.
- ஓர் அதிகாரத்தில் 10 பாடல்கள் உண்டு.
- மொத்தம் 1330 பாடல்கள் உண்டு.
- உலகப் பொதுமறை என்றும் அழைப்பர்.



## குறளைக் கண்டுபிடியுங்கள்

- திருக்குறள் - தெளிவுரைப் புத்தகம் உங்கள் கைகளில் உள்ளதா? நூலகத்திலிருந்து எடுத்துக் கொள்ளுங்கள்.

### குறளும் பொருளும்

(குறள் 100)

***இனிய சொற்கள் உள்ளபோது, ஒருவர் தீய சொற்களைப் பேசுதல் என்பது நல்ல கனி இருக்கும் போது அதை உண்ணாமல் காயை உண்பதற்குச் சமம்.***

(குறள் 108)

*ஒருவர் செய்த நன்மையை மறப்பது நல்லதன்று. ஆனால் அவர் செய்த தீமை அன்றே மறந்துவிடுதல் நல்லதாகும்.*

(குறள் 294)

*ஒருவர் தம் மனசாட்சியின்படி (உள்ளம்) பொய் இல்லாமல் நடப்பாராயின், அவர், உலகிலுள்ளோர் உள்ளத்தில் எல்லாம் சிறப்பைப் பெறுவார்.*

(குறள் 396)

*மணலைத் தோண்டத் தோண்டத்தான் நீர் ஊறிவரும். அதுபோல மேலும் மேலும் கற்பதன் மூலம்தான் அறிவு வளரும்.*

(குறள் 788)

*உடை நெகிழ்ந்தவனது கை உடனே விரைந்து ஆடையை பிடிப்பது போல, நண்பனுக்குத் துன்பம் வந்தால் விரைந்து சென்று துன்பத்தை நீக்குவதுதான் சிறந்த நட்பு.*

- இதைப்போன்றே பிற்காலத்தில் பல பாடல்களை எழுதிப் புகழ்பெற்ற ஒருவரே **சுப்பிரமணிய பாரதியார்** எனக் கூறி **அச்சமில்லை** பாடலை உயிரோட்டமாகப் பாடிக்காட்டுங்கள். அதைப் பற்றிய சிறிய விளக்கம் கொடுக்கலாமல்லவா! அல்லது குறுந்தகடில் (CD) பாடலைப் பதிவு செய்து வகுப்பில் கேட்கச் செய்யுங்கள்.
- இது சுதந்திர வேட்கையை வலியுறுத்தும் பாடலாகும். இவர் தேசிய ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் பல பாடல்களைப் பாடியுள்ளார். இந்த பாடலைப் பாடிக் காட்டுங்கள்.

**சிந்து நதியின் மிசை நிலவினிலே**
**சேர நன்னாட்டிளம் பெண்களுடனே**
**சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்து**
**தோணிகள் ஓட்டி விளையாடி வருவோம்**

**பாரதியார்**

**சுப்பிரமணிய பாரதியார்**

- **ஊர்** :எட்டயபுரம்

**பிறப்பு** : 11.12.1882
**தந்தை** : சின்னச்சாமி அய்யர்
**தாய்** : இலட்சுமி அம்மாள்
**படைப்புகள்** : கண்ணன் பாட்டு
குயில் பாட்டு
பாஞ்சாலி சபதம்
பாப்பா பாட்டு
**இறப்பு** : 12.09.1921



## பாடலை முழுமைப்படுத்துங்கள்

இந்தச் சொற்களைக் கரும்பலகையில் எழுதுங்கள். தேவையான சொற்களைப் பயன்படுத்திப் பாடலை முழுமைப்படுத்தச் சொல்லுங்கள். ஆசிரியரும் ஒரு படைப்பை இறுதியில் வெளியிடலாம். மேம்படுத்திய பின் படைப்புத் தொகுப்பில் சேர்க்கவும்.

| | |
|---|---|
| நாங்கள் | நீங்கள் |
| சிறந்த | நலம் |
| வாங்கி | விதவிதமான |
| சிறப்பாக | வளமான |

நல்ல நல்ல புத்தகம்
நாங்கள் படிக்கும் புத்தகம்
சின்னச் சின்ன புத்தகம்
சிறந்த நல்ல புத்தகம்
வண்ண வண்ணப் புத்தகம்
வாங்கி நன்றாய்ப் படிக்கலாம்.

**நூலகச் செயல்பாடு**



செயல்பாடு முடிந்தபின் குழந்தைகளைப் பள்ளி நூலகத்திற்கு அழைத்துச் செல்லுங்கள். அவர்கள் பாடல் புத்தகங்களைத் தேர்வு செய்யட்டும். விருப்பமான பாடல்களைச் சேகரித்து வகுப்பில் பாடட்டும். பின்னர் எனது பாடல் புத்தகத்தில் எழுதட்டும். எல்லோரும் சேகரித்த பாடல்களைத் தொகுத்து எனது பாடல் தொகுப்பு என்ற பெயரில் மலராக வெளியிடலாம்.



## சுவரொட்டி தயாரியுங்கள்

**சுவரொட்டி தயாரிக்கும் போது ஆசிரியர் கவனத்திற்கு**

- பல்வேறு சுவரொட்டிகளைப் பார்க்கும் வாய்ப்புக் கொடுக்கவும்.
- நிகழ்ச்சியைப் பற்றி நன்றாகக் கலந்தாலோசிக்க வாய்ப்புக் கொடுக்கவும்.
- குழுவாகவே இச்செயல்பாட்டைச் செய்யட்டும்.
- எழுதியவற்றை வாசித்து மேம்படுத்தட்டும்.
- சுவரொட்டியின் அளவையும், அமைப்பையும் விளக்கிக் கூறவும்.
- வாக்கியங்கள் சுருக்கமாக இருக்கட்டும்.
- சுவரொட்டி தயாரிப்பதற்கான பொருட்களைக் கொடுக்கவும்.
- தலைப்பு பெரியதாகவும், அழகாகவும் இருக்க வேண்டும்.
- ஸ்கெட்ச், மார்க்கர் பயன்படுத்தவும்.

மேலே சொல்லப்பட்ட தயாரிப்புகள் செய்யட்டும். இப்போது பாடத்தில் கொடுக்கப்பட்டுள்ள செயல்பாட்டைச் செய்யக்கூறுங்கள். மதிப்பீடு செய்யுங்கள்.

| தொடர் மதிப்பீடு | |
|---|---|
| | • சுருக்கமான வாக்கியம்.<br>• செய்திகள் கவர்ச்சியானதாக இருக்கவும்.<br>• இடம், தேதி, பொருள் குறிப்பிடுதல் வேண்டும். |



## பிழைதிருத்துங்கள்

எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் இவற்றை அறிமுகப்படுத்தவே இந்தச் செயல்பாடு கொடுக்கப்பட்டுள்ளது. செயல்பாட்டில் பயனிலையில் பிழை உள்ளது. அதைத்திருத்தி எழுதக் கூறுங்கள். தேவையான விளக்கம் கொடுக்கவும்.

**மலர்விழி -எழுவாய்**
**மோர்- செயப்படுபொருள்**
**குடித்தாள் - பயனிலை**

இதுபோன்ற மேலும் பல செயல்பாடுகள் கொடுக்கலாம்.

**திருந்தப்பேசு**



கட்டடத்திலுள்ள சில சொற்களைக் கரும்பலகையில் எழுதலாம். குழந்தைகளை வாசிக்கப் பயிற்சி கொடுக்கவும். மீண்டும் மீண்டும் வாசிக்கட்டும், சத்தமாக வாசிக்கச் சொல்லவும். செயல்பாட்டைத் தொடர்ந்து மேலும் சில பயிற்சிகள் கொடுக்கலாம்.

**நாபிறழ் பயிற்சி**

நாழிச் சோளத்துக்கு
ஏழு சோளத் தோசை

வியாழக்கிழமை
ஏழைக் கிழவன்
வாழைப் பழத்தோல்
வழுக்கிக் கீழே விழுந்தான்

ரெண்டு செட்டு சோளத் தோசையில
ஒரு செட்டு சோளத் தோசை
சொத்த சோளத் தோசை



## பொருத்தமான சொல்லை எழுதுங்கள்

- இது உச்சரிப்புப் பிழைகளை போக்கும் நோக்குடன் கொடுக் கப்பட்டுள்ள செயல்பாடாகும். பாடப்புத்தகத்தில் செயல்பாட்டைக் குழந்தைகள் செய்யட்டும். மேலும் சில செயல்பாடுகளை இப்பயிற்சிக்காகக் கொடுக்கலாம்.

காட்டில் வாழ்வது................................ **(புலி/புளி)**

மீன் பிடிக்க உதவுவது....................... **(வலை/வளை)**

மரத்தை அறுப்பது.............................. **(வால்/வாள்)**

சூரியன் ............ திசையில் உதிக்கிறது **(கிளக்கு/கிழக்கு)**



## ஒலிப்புடன் சொல்லுங்கள்

- உச்சரிப்புப் பிழை, எழுத்துப்பிழைகளைத் தவிர்க்க **ன / ண, ர / ற** சொற்கள் அடங்கிய செயல்பாடுகளையும், பாடல்களையும் அதிகமாகக் கொடுக்கலாமல்லவா? சில பாடல்கள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளன.

## ஒலிப்பு உச்சரிப்பு

**ழ**
பழுத்தது வாழை
வெடித்தது தாழை
பெட்டிதான் பேழை
அறிவிலான் ஏழை

**ள**
தென்னையில் பாளை
வளரணும் மூளை
சுண்ணாம்புச் சூளை
அடுத்த நாள் நாளை

**ல**
ஆட்டும் நாய் வாலை
பொழுது எழும் காலை
திரையின் பேர் சீலை
முறுக்கிடும் நூலை

**ண**
வானவில் வண்ணம்
சந்தனக் கிண்ணம்
நெஞ்சிலே எண்ணம்
வெல்வது திண்ணம்

**ன**
பொய்கையில் அன்னம்
உணவின் பேர் அன்னம்
குழந்தையின் கன்னம்
தேர்தலில் சின்னம்

**ந**
வீசு பந்து
தெருவினில் சந்து
வெற்றிக்கு முந்து
பாடுவாய் சிந்து

## ழ கரப் பாடல்

ஆழக் கிணறு
ஏழு கிணறு
ஏழு கிணறும்
ஒரே வடியிலே

ஆழக்கிணறில்
ஆறு கிணறு
பாழுங்கிணறு
பார்க்கும் பொழுதிலே

பாழுங்கிணறு
இருக்கும் வழியில்
வேழம் ஏழு
நடந்து வந்தன

நடந்து வந்த
வேழம் ஏழும்
பாழுங் கிணற்றில்
விழுந்து பிளிறின

விழுந்த வேழம்
எழுந்து எழுந்து
வெளியில் வர
முயன்று பார்த்தன

ஏழு ஊரில்
வாழும் மக்கள்
ஏழு கிணறின்
வழியில் வந்தனர்.

வேழம் ஏழும்
விழுந்து கிடக்கும்
பாழுங்கிணற்றைப்
பார்த்து பயந்தனர்

வேழம் ஏழும்
பிளிறிப் பிளிறி
மெல்ல மெல்ல
தூங்கிப் போயின.

கண்விழித்து
பார்த்த பொழுது
கனவு என்று
தெரிந்து கொண்டேனே

## அலகு மதிப்பீடு

| மண்டலங்கள் | தரம் |
|---|---|
| கருத்து கூறுதல் | |
| பாடல் எழுதுதல் | |
| வினா உருவாக்குதல் | |
| பிழை திருத்துதல் | |

**கருத்தைக் கூறுங்கள்**

சின்னஞ் சிறிய நூலிது
சிறந்த நல்ல நூலிது
எண்ண முடியா கருத்துகள்
எடுத்து ரைக்கும் நூலிது

உலகம் வாழ வள்ளுவன்
உவந்த ளித்த நூலிது
அளவில் லாத கருத்துடன்
அமைந்த எங்கள் திருக்குறள்

- பாடலிலுள்ள கருத்தைக் கூறுங்கள்

**பாடலை முழுமைப்படுத்துங்கள்**

உலகம் வாழ வள்ளுவன்
உவந்த ளித்த நூலிது
அளவில்லாத கருத்துடன்
அமைந்த எங்கள் திருக்குறள்

இரண்டு வரியில் இன்பத் தமிழை
..............................................................................
..............................................................................
..............................................................................

**பத்தியை வாசித்து வினாக்கள் உருவாக்குங்கள்**

திருவள்ளுவர் தமிழ்நாட்டில் மைலாப்பூர் என்னும் ஊரில் பிறந்தார். அவருடைய அப்பா பகவான், அம்மா ஆதி, திருவள்ளுவர் திருக்குறளை எழுதினார். திருக்குறளில் மொத்தம் 1330 பாடல்கள் உள்ளன. திருக்குறள் இரண்டு அடிகளைக் கொண்ட பாடல் ஆகும்.

**தொடரிலுள்ள பிழைகளைத் திருத்துங்கள்**

- அமுதல் தனது அறைக்குல் நுளைந்தான்.
- அப்போது மின்சாரம் தடைப்பட்டது.
- ஓடி வெலியே வந்தான்.
- நிளா ஒலியில் வானத்தில் நட்சத்திரங்கள் மின்னின.
- இரவின் அர்புதக் காட்சி அவவணை வியயப்படையச் செய்தன.